| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மாரியப்பன் | நாள் | 24.08.2021 |
| தகப்பனார் பெயர் | வெங்கட்ராமன் | | |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

மீதியுள்ள இரண்டு சர்வே எண்கள் யாருடைய பெயரில் உள்ளது என்றால் மாரியப்பன் பெயரில் உள்ளது. மூன்று சர்வே எண்கள் மாரிமுத்து பெயரில் உள்ளது என கூறியதற்கான சர்வே எண்கள் என்ன என்றால் சர்வே எண்கள். 10, 11, 5. என்னுடைய பெரிய பாட்டன் பெயரும், பெரியப்பா பெயரும் தாசகவுண்டர் தான். என்னுடைய பெரியப்பா தாசகவுண்டருக்கு எந்த சர்வேஎண்ணில் 5 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் படிக்க தெரியாது பார்த்து தான் கூறமுடியும். நான்கெல்லை தெரியுமா என்றால் தெற்கே தங்கவேலு நிலம், கிழக்கே பெருமாள் நிலம், மேற்கே சின்னண்ணகவுண்டர் நிலம், வடக்கே பெரிய பாட்டன் தாசப்பகவுண்டரின் வாரிசுகளின் நிலம். என்னுடைய பெரியப்பா தாசகவுண்டர் இறந்துவிட்டார். தாச கவுண்டரின் வாரிசுகள் பெயர் மாரியப்பன், சின்னபையன், கோவிந்தம்மாள், பெருமாயி, ராமக்காள், மாரியம்மாள் ஆகிய ஆறுபேர் பெரியப்பாவின் வாரிசுகள். என்னுடன் பிறந்த மாரிக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் 1 1/2 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. அதன் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. நான்கெல்லை என்ன என்றால் படிப்பறிவு இல்லை என்பதால் தெரியாது. என்னுடைய தம்பி முனியப்பனுக்கும் 1 1/2 ஏக்கரா ஒதுக்கப்பட்டது. அதன் சர்வேஎண் தெரியாது. நான்கெல்லை தெரியாது. வா.சா.ஆ.1 ல் எஸ் என குறிப்பிட்டுள்ளவரின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனாருடன் பிறந்தவர்கள் தாசப்பகவுண்டர் மற்றும் கந்தாயி. மேற்கு பக்கம் உள்ள முனியப்பன் யார் என்றால் என்னுடைய பெரியப்பாவின் மகன். வா.சா.ஆ.2 ல் கூறியுள்ளவாறு நிலஅமைப்பு இல்லை என்றால் சரியல்ல. கிணற்றின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ல் திசை போடவில்லை என்றால் போட்டு வேண்டுமென்றாலும் தருகிறேன். ச.எண்.252/5 க்கு அருகே 252/10, 11 உள்ளது என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியாக தான் குறிப்பிடப் பட்டுள்ளது. 02.07.1941 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ச.எண்.252/5 ல் நான் வீடு கட்டவில்லை என்றால்

கட்டியுள்ளேன். 5 சர்வே எண்களும் ஒன்றாக உள்ளது என கூறுவதற்கு புலவரைபடத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வீட்டுவரி ரசீது மின் கட்டணம் ஆகியவை வழக்கு சொத்திற்குரியதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வீடு இல்லை எனவும், ஆகவே தான் சொத்துவிபரத்தில் காண்பிக்கவில்லை என்றால் காண்பித்துள்ளேன். என்னுடைய வீட்டிற்கு கிழபுறம் ரோடு செல்வதாகவும், அந்த ரோட்டிற்கு கிழபுறம் பிரதிவாதிகளின் கூரை உள்ளது என கூறுவதற்கு சர்வேஎண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துகள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது எனவும் ஆகவே பிரதிவாதிகள் 3ம்தரப்பினர் என கூறுவது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவாசொத்திலிருந்து வெளியேற்ற முயற்சி செய்ததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. 18.08.2015ல் என்னை வெளியேற்ற முயற்சி செய்ததாக கூறியதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ததற்காக புகாரை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாரிமுத்து மகன் மாரியப்பன் பெயரில் பட்டா உள்ளது என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு பட்டாதாக்கல் செய்துள்ளேன். பட்டா தாக்கல் செய்யவில்லை எனவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ச.எண்.252/12க்கு சம்மந்தப்பட்டது எனவும் ஆகவே வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அண்ணன் மாரியப்பன் 25.09.1989ல் இறந்துவிட்டார் என்றால் மாரியப்பனை எனக்கு தெரியாது. என்னுடைய மாமனார் பெயர் பழனியப்பன். சூரப்பள்ளியிலிருந்து நரியம்பட்டி செல்லும் வழியில் தான் என்னுடைய மாமனார் வீடு உள்ளது என்றால் ஆமாம். எனது மனைவி பெயர் பழனியம்மாள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள வீடு என்னுடையதா என்றால் தெரியாது. நரியம்பட்டி ரோட்டிலுள்ள ச.எண்.249/7ஏ மற்றும் 7பி– ல் உள்ள வீட்டில் நான் குடியிருக்கிறேனா என்றால் என்னுடைய மகன் தான் குடியிருக்கிறார். என்னுடைய மகன் அங்கு தறி போட்டுள்ளார் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள இடத்தில் தான் என்னுடைய மகன் தறி போட்டுள்ளார் என்றால் அது பி.வா.சா.ஆ.1 ( மூன்று புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு) அந்த வீட்டில் தான் குடியிருக்கிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.9க்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9யை குறித்து வழக்குரையில் கூறவில்லை என்றால்

சரியல்ல. வா.சா.ஆ–9 யை சாட்சிய சட்டப்படி ஏற்றுகொள்ள முடியாத ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் தங்கம்மாள் எழுதி வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 ல் கூறியுள்ள ஆவணங்களை குறித்து வழக்கில் கூறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் அனைத்திற்கும் மாரிமுத்து மகன் மாரியப்பன் பெயரில் பட்டா எண்.1076 உள்ளது என்றால் சரியல்ல. மாரிமுத்து மகன் மாரியப்பன் என்பது 1ம்பிரதிவாதியின் சகோதரர் என்றால் எனக்கு தெரியாது வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.